**இரண்டாந் தர நகரங்கள் மற்றும் கிராம சமூக அடிப்படையிலான நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டம் (கடன் இல. 2758 - எஸ்ஆர்ஜ - எஸ்எவ்) - 2015**

---

இரண்டாந்தர நகரங்கள் மற்றும் கிராமிய சமூக அடிப்படையிலான நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டத்தின் 2015 சனவரி 01 முதல் 2016 சனவரி 31 வரையான 13 மாத காலத்திற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 யூலை 22 ஆம் திகதிய 2758 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணியின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைசசு நிறைவேற்றல் முகவராகவுள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. கிழக்கு மாகாணத்தின் மூதூர் நகரப் பகுதிகளில் வசிக்கின்ற 52,000 மக்களுக்கு பாதுகாப்பான நீர் வழங்குதல் மற்றும் நீர்த்துறை நிறுவனங்களைப் பலப்படுத்துவதன் மூலம் பாதுகாப்பான நீரை வழங்குவதற்கான இயலளவை அதிகரித்தல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,942.47 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 17.87 மில்லியனானதுடன் அதில் ரூபா 1,445.71 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 13.3 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பத்தில் 2014 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று பட்டியலிடப்பட்டதுடன் பின்னர், இது 2015 யூலை 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2016 சனவரி 01 வரை தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

**1.3. கணக்காய்வாரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக்

கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர்களின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2016 சனவரி 31 இல் உள்ளவாறான மீதி அத் திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தல்களிற்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளும் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2016 சனவரி 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கிணங்க 2016 சனவரி 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தது என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வு காலப்பகுதிக்கான மற்றும் 2016 சனவரி 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வு காலப்பகுதிக்காக பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வு காலப்பகுதியின் போதான | 2016 சனவரி 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 13.30 | 1,445.71 | இல்லை | 21 | 10.06 | 1,280 |
| இலங்கை அரசாங்கம் | 4.57 | 496.76 | 5.86 | 59 | 3.68 | 435 |
| **மொத்தம்** | **17.87** | **1,942.47** | **5.86** | **80** | **13.74** | **1,715** |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், செய்யப்பட்ட ரூபா 1,445.70 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 13.30 மில்லியனான மொத்த ஒதுக்கீட்டில், ரூபா 1,280 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 10.06 மில்லியன் மாத்திரம் 2016 சனவரி 31 ஆன கடன் முடிவு திகதியில் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

பெறப்பட்ட தகவலின்படி, தலைமை வேலைகள், நிலத்து நீர் பரிமாற்றம் மற்றும் மூதூரில் சுத்திகரிப்பு பொறி என்பவற்றின் நிர்மாண வேலைகள் ஆரம்ப பூர்த்தியாக்கல் திகதியிலிருந்து 11 மாதங்களிற்கு மேலான தாமதங்களுடன் 2014 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் தாமதப்பட்ட காலங்களில் செய்யப்பட்ட விலை வேறுபாடுகளாக ரூபா 11.62 மில்லியன் மேலதிக கிரயம் ஏற்பட்டிருந்தது. மூதூரில் தண்ணீர் தேக்க கட்டிடம் நிர்மாணங்களிற்காக கடுமையான நிர அரிப்பு ஏற்பட்டுள்ளதுடன் சேதங்களிற்கும் சாத்தயமுள்ளது என 2016 ஒக்தோபரில் செய்யப்பட்ட பௌதீக பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

### 3.3 முரணான செலவினம்

மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தால் வேறு கொடையாளர் நிதியளிக்கப்பட்ட செயற்திட்டத்தின் ஊழியர்களிற்கான செலுத்தப்பட்ட ரூபா 3.96 மில்லியன் கூட்டுத்தொகையான சம்பளங்கள் இந்த செயற்திட்டத்தின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 3.4. நிதிக் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்

நிதிப்பிரமாணம் 133 மற்றும் 2010 யூலை 26 ஆந் திகதிய டிஎம்ஏ/2010(5) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.5. செயற்திட்ட நடவடிக்கைகளின் முடிவுறுத்தல்

செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2016 சனவரி 31 இல் உள்ளவாறு மூடப்பட்டிருந்த போதிலும், அமுலாக்கல் முகவர் கணக்குகள் கணக்கொழிப்தற்கு இயலக்கூடியவாறு செயற்திட்டத்தின் சொத்துக்களை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம், நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்காததுடன் செயற்திட்ட காலப்பகுதியின் இறுதியில் கணிப்பீட்டுச் சபை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது.